முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 24.09.2025

O.S. 153/2021

வா.சா.1 - சின்னப்பா

1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. இந்த வழக்கு சொத்துக்கள் உட்பட 36 செண்ட் சுப்பிரமணியநாடாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரி. சுப்பிரமணியநாடாருக்கு 2 மகன்கள் சின்னணைஞ்சபெருமாள் நாடார். முத்தணைஞ்ச பெருமாள் நாடார். 36 செண்டில் தெற்கணைய 18 செண்ட் சின்னணைஞ்சபெருமாளுக்கு ஒதுக்கப்பட்டது. வடக்கணைய 16 செண்ட் முத்தணைஞ்சபெருமாளுக்கு ஒதுக்கப்பட்டது. சின்னணைஞ்சபெருமாளுக்கு 3 மகன்கள் அதில் ஒருவர் மன்னம்பெருமாள், தங்கையா, சுடலைமணி. மன்னம்பெருமாளுக்கு 2 மனைவிகள் என்று சொன்னால் சரிதான். மூத்தமனைவின் பெயர் தெரியாது. 2 வது மனைவின் பெயர் செல்லம்ாள். மூத்தமனைவிக்கு பகவதி, மற்றும் அமிர்தகனி என்ற 2 மகள்கள். பகவதி'க்கு தங்கம், சேகர், ராணி என்று 3 பிள்ளைகள் என்று சொன்னால் சரிதான். சேகர், தங்கம், மனோகர்., நாராயணபெருமாள், ராணி ஆகும். மற்றொரு நபர் பெயர் எனக்கு நியாபகம் இல்லை. பகவதிக்கு ஒரு பெண்பிள்ளையும், 5 ஆண்பிள்ளைகளும் உண்டு.

2, அமிர்தகனிக்கு தங்கபெருமாள், சாமிகண்ணன், சந்திரசேகர், முருகன், மது மற்றும் ஒரு பெண் பிள்ளை லதா ஆவார்கள். செல்லம்மாளுக்கு வழிபிறந்தவர்கள் நான், காந்தி, பொன்னம்பலம் ஆகியோர்கள். மன்னம்பெருமாளுக்கு தம்பி தங்கையாவுக்கு முருகேசன், லீலா, முருகேஸ் மேகலா, குமரேசன், அழகேசன் ஆகியோர்கள் பிள்ளைகள் ஆவார்கள். சுடலைமணிக்கு அனுஷா, கிருஷ்ணமணி, கோபால், சுந்தரலிங்கம், தங்ககனி, வசந்தி ஆகியோர்கள் பிள்ளைகள் ஆவார்கள். மன்னம்பெருமாளுக்கு மற்றொரு தம்பி சுடலைமணி ஆவார். சின்னணைஞ்சபெருமாளுக்கு உரிய 18 செண்டை நானும், முருகேசன் மகன் சதீஷ், சுந்தரலிங்கம் மகன் சுபின் ஆகியோர்கள் விலைக்கு வாங்கி உள்ளோம் என்றால் சரி. தங்கையா மற்றும் சுடலைமணி வாரிசுகளிடம் இருந்து நாங்கள் விலைக்கு பெற்றோம். மன்னம் பெருமாளின் வாரிசுகளிடம் இருந்து நாங்கள் விலைக்கு வாங்கவில்லை என்றால் சரியல்ல. பொன்னம்பலம் கையொப்பம் செய்துள்ளார்.

2. மன்னம்பெருமாளுக்கு பொன்னம்பலத்தை தவிர வேறுவாரிசுகளும் உண்டு என்றால் சரி. வா.சா.ஆ.1 விலைபத்திரத்தில் பொன்னம்பலம் எங்கு கையொப்பம்

செய்துள்ளார் என்றால் எனக்கு படிக்கமுடியவில்லை கண்ணாடி எடுத்து வரவில்லை. அந்த ஆவணத்தில் பொன்னம்பலம் ஒரு தரப்பினர் அல்ல என்றாலும் அதை மறுக்க வேண்டும் என்பதற்காக கண்ணாடி எடுத்துவரவில்லை என்று பொய்சொன்னேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் வழக்கறிஞரிடம் உள்ளது. அதை ஏன் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் வா.சா.ஆ.1 ஆவணத்தின் நகலை எந்த காரணமும் சொல்லாமல் தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. மன்னம்பெருமாளின் வாரிசுகளை சேர்க்காமல்பெற்றுள்ள வா.சா.ஆ.1 விலைபத்திரம் சட்டப்படி செல்லாது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் நான் உரிமையாளர் என்றும் எந்த வழக்கும் நடத்த அருகதை இல்லை என்றால் சரியல்ல.

3. நீதிமன்ற ஆணையர் தாவா இடத்தை பார்வையிட்டார் என்றால் சரி. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள உத்தேச வரைபடத்தில் காண்பிக்கப்பட்ட A சொத்திற்கு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. கிடப்பில் பிரதிவாதிகள் உத்தேச வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவை போல் உள்ளது என்றால் சரி. ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.1ல் DEFND என்ற இடம் 4ம் பிரதிவாதி நாகலிங்கத்தின் சொத்து என்றால் சரி. நாகலிங்கத்தின் அடுத்த சொத்து CDNMC சொத்து 3ம் பிரதிவாதி முத்தணைஞ்ச பெருமாளின் சொத்து என்றால் சரி.

4. அதற்கு அடுத்த BCMLPQB 5ம் பிரதிவாதி கோவில் சொத்து என்றால் சரி. ABQPLKA 1ம் பிரதிவாதி பாலகிருஷ்ணன் சொத்து என்றால் சரி. கோவில் சொத்திற்கு முன்னாடி அடைப்பு இல்லாமல் திறந்த நிலையில் உள்ளது என்றால் சரி. வேலியோ. காம்பவுண்ட் சுவரோ, கேற்றோ இல்லை. ASBQPLKA. POMLP, CDNMOC, DEFND ஆகிய கோட்டில் முள்வேலி உள்ளது என்றால் சரிதான். முள்வேலி போட்டதால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. என்னுடைய சொத்தில் KR பகுதி திறந்து உள்ளது என்றால் சரி. IH இடையே இடைவெளி உள்ளது என்றால் சரி தான். அந்த இடைவெளி எனக்கு உரிமைபட்டது இல்லை. பங்காளிகளுக்கு உரிமைபட்டது ஆகும். FG பகுதி திறந்து உள்ளது என்றால் சரி. பங்காளிகளுக்கு பாத்தியப்பட்டது. நீதிமன்ற ஆணையர் சொத்திற்கு வந்த போது சந்திரோதயம் சொத்திற்கு வழியாக வந்து நடராஜன் சொத்தின் மூலம் எனது KR இடைவெளி வழியாக எனது சொத்திற்கு அழைத்து சென்றேன் என்றால் சரி. தற்போது அவ்வாறு தான் சென்று வருகிறேன். முள்வேலி போடுவதற்கு முன்பு இவ்வாறு சென்று வந்தேன்.

5. OP கோட்டிலும் LM கோட்டிலும் முள்வேலி அமைக்கப்பட்டிருக்கிறது என்றால் சரி. எப்போது என்றால் பிரதிவாதிகள் அவர்கள் சொத்தில் முள் வேலி அமைத்த பிறகு நான் கோவில் சொத்தில் மேற்படி முள்வேலி அமைத்தேன். கோவில் சொத்து பொதுவானது என்றால் சரி. எங்கள் குடும்ப பொது சொத்து. எனது சொத்திற்கு கோவில் சொத்திற்குள் வந்து செல்ல வேண்டும் என்றால் சரியல்ல. சுடலைமணி மகன் சுந்தரலிங்கம் அவரது மகள் அபிதாவிற்கு 08.08.2025 ல் திருமணம் நடந்தது. அந்த திருமணத்திற்கு திரை அமைத்து நிகழ்ச்சிகளை வழக்கு சொத்தில் நடத்தினோம் என்றால் இல்லை. A பட்டிகை சொத்தில் திருமண நிகழ்ச்சி நடந்தது என்றாலும் OP, LM வேலியை விலைக்கு அந்த வழியாக சென்று வந்தோம் என்றால் சரி. வேலியை எடுத்து ஆட்களுக்கு விருந்து கொடுத்தோம்.

6. 5ம் பிரதிவாதி கோவிலில் நானும் உறுப்பினராக உள்ளேன். 5ம் பிரதிவாதி கோவில் சுப்பிரமணியநாடார் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 12 வது பக்கத்தில் குறிப்பிட்டுள்ள பாதை அவகாசத்திற்கு முன்பத்திர ஆவணங்கள் எதையும் சொல்லப்படவில்லை என்றால் சரி. அந்த பாதை உரிமை சம்பந்தமாக முன்பத்திர ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். வழக்கு A பட்டிகை சொத்திற்கு கோவில் சொத்து வழியாகவும், நீதிமன்ற ஆணையரை அழைத்து சென்ற வழியாகவும் சொத்திற்கு தெற்கு பக்கத்தில் உள்ள திறப்பு வழியாகவும் சென்று வருகிறேன்என்றால் சரியல்ல. அவரவர்கள் சொத்து எப்போது வேலி போட்டார்கள் என்றால் வா.சா.ஆ.1 ஆவணம் எழுதி முடித்தவுடன் வேலி போட்டார்கள். நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றால் சரி.

7. உண்மையில் நான் சொல்வது போல் B பட்டிகை சொத்து பாதை கிடப்பில் இல்லை என்றால் சரிதான். முள்வேலி போட்டு மொத்தமாக அடைத்து வைத்துவிட்டார்கள். நீதிமன்ற ஆணையரிடம் B பட்டிகை பாதையை காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். பிரதிவாதிகளின் முள்வேலியை மாற்ற வேண்டும் இந்த வழக்கில் நான் பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. நான் உத்தரவு பெற்று வைத்திருந்தேன். ஆனால் நான் அந்த உத்தரவின் அடிப்படையில் முள்வேலியை திறக்கவில்லை ஏன் என்றால் எனது பிள்ளைகளின் வாழ்க்கை பாதிக்கும் என்று நான் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த வழக்கில் முத்தணைஞ்சபெருமாள் நாடாருடைய வாரிசுகள் அனைவரும் அவசிய தரப்பினர்கள் என்றாலும் அவர்களை இந்தவழக்கில் சேர்க்கவில்லை என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கதல்ல. 5ம் பிரதிவாதி கோவிலுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு உரிய நடவடிக்கையை பின்பற்றாமல் கட்டளை 1 விதி 8 ன் கீழ் மனு

தாக்கல் செய்யாமல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கோவிலுக்கு எதிராக பரிகாரம் கேட்கவில்லை.

8. 5ம் பிரதிவாதிக்காக வேண்டி இந்த வழக்கை நடத்த பொன்னம்பலத்திற்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், அதிகாரம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. அவர் கோவிலின் தலைவர் ஆவார். பொன்னம்பலம் எனது உடன்பிறந்த அண்ணன் ஆவார். எனக்கும், பொன்னம்பலத்திற்கும் சண்டை சச்சரவு இல்லாமல் சுமூக உறவு என்றால் சரி. 5ம் பிரதிவாதி கோவில் நிர்வாக சம்பந்தமாக குடும்பத்திற்குள் ஏற்பட்ட தகராறுக்காக இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சொல்லியுள்ளபடி B பட்டிகை சொத்து எப்போதும் பாதையாக இருந்தது இல்லை என்றாலும், யாரும் பாதையாக பயன்படுத்தியது கிடையாது என்றாலும் சரியல்ல. சுப்பிரமணியநாடார் காலத்திற்கு பின் அவரது இரண்டு பிள்ளைகளுக்கு பிரிவினை செய்த போது எந்த பாதையும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான்.

9. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்காக உரிமை இல்லாத நபர்களிடம் இருந்து பாதை அவகாசம் காண்பித்து வா.சா.ஆ.1 விலைபத்திரத்தை உற்பத்தி செய்து உடனடியாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராதில் சொல்லியுள்ள விபரம் அனைத்தும், இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்லபப்பட்டவை என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல.